# திரு V.K. அண்ணா

1947-ல் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் முதல் மாணவன். அமெரிக்காவில் மிக்சிகன் பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். தனக்கான வேலையை அமைத்துக்கொள்வதில் அமெரிக்காவா ஆலமரத்துப்பட்டியா என்ற நிலையில் ஆலமரத்துப்பட்டிதான்- இந்தியாதான் - என்ற உறுதியான நிலைப்பாட்டை எடுத்தவர். தமிழக அரசின் கல்வித்துறையில் உயர்பதவி கிடைத்தபோதும், சுதந்திரத்தின்போது ஏற்பட்ட மதக்கலவரங்களால் அகதிகளாக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க இளைஞர்களுக்கு மகாத்மா காந்தியடிகளால் அழைப்பு விடுக்கப்பட்டபோது அரசுப் பணியைத் துறந்து அகதிகள் முகாமில் பணியாற்றத் துணிந்த இளைஞர். அவர்தான் பிற்காலத்தில் **V.K.** அண்ணா என்று அனைத்து தரப்பினராலும் அன்புடன் அழைக்கப்பட்ட காந்திகிராமம் வெ. கிருஷ்ணமூர்த்தி அண்ணா அவர்கள் ஆவார். இந்த ஆண்டு V.K. அண்ணா அவர்களுக்கு நூற்றாண்டு விழா ஆகும்.

திருவண்ணாமலையில் திரு வெங்கட்ராமன்-தைலாம்மாள் தம்பதியினருக்கு மூத்த மகனாக 15.03.1917-ந் பிறந்தவர் திரு V.K. அண்ணா அவர்கள் ஆவார். சிறுவயதிலேயே தாயை இழந்தார். இவரது பெரியப்பா திரு சேஷாசலம் அவர்கள் தேச விடுதலைக்காகப் பாடுபட்ட தீவிர காங்கிரஸ்காரர். தினந்தோறும் இல்லாதவர்களுக்கு வீட்டில் அன்னதானம் செய்வார். இந்த நிகழ்வுகளெல்லாம் பிற்காலத்தில் V.K. அண்ணாவின் செயல்களுக்கு தூண்டுகோலாயிருந்தன, என்று சொல்லலாம்.

வேலையைத் துறந்து காந்தியடிகளின் வேண்டுகோளை ஏற்று வடமாநிலத்தில் பரிதாபாத் மற்றும் சேவா கிராமம் அகதிகள் முகாம்களில் தொண்டாற்றி வந்தார். அங்கு திருமதி ஆஷாதேவி அரியநாயகம் போன்ற காந்தியவாதிகளின் நட்பு கிடைத்தது. காந்திய கொள்கைகளில் முழு ஈடுபாடு கொண்டவராய், மகாத்மாவின் எண்ணங்களை நிறைவேற்றும் செயல்வீரராய் புதுப்பரிமாணம் எடுத்தார்.

வார்தா முகாமில் சேவையாற்றிக் கொண்டிருந்த இளைஞர் V.K. அவர்களை திருமதி சௌந்திரம் அம்மாள் அவர்கள் முதல் முறையாக பார்க்கிறார். V.K. அண்ணா அவர்களின் வாழ்விலும் காந்திகிராமத்தின் வரலாற்றிலும் புது திருப்புமுறையாக அமைந்தது அந்த சந்திப்பு. காந்திகிராமம் எனும் கனவுத்திட்டத்தினை அம்மா துவங்கும்போது V.K. அவர்களையும் துணைக்கு அழைத்துக்கொண்டார்.

1947-ல் காந்திகிராமம் துவங்கப்பட்டது. சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகள் படிப்படியாக காந்திகிராம கிராமியக் கல்லூரியாக வளர்ந்தது. V.K. அண்ணா அவர்கள் காந்திகிராமம் கிராமியக் கல்லூரியின் முதல் முதல்வர் ஆனார். சௌந்தரம் அம்மாவின் ஆசியோடு, தன்னுடன் அயராது உழைக்கக்கூடிய குழுவினை அமைத்துக்கொண்டு கிராமங்களுக்குச் சென்று இளைஞர்களைப் படிக்க அழைத்து வருவது மட்டுமல்லாமல் கிராமங்களில் ஏற்படும் பிரச்சனைகளையும் தீர்க்க உதவினார். பணவசதி இல்லாத மாணவர்களுக்கு தானே பணம் கட்டினார். இன்றும் உயர்பதவிகளில் இருக்கும் பலர் இதைக கூறி நெகிழ்கின்றனர்.

ASW என்ற ஜெர்மனிய தொண்டு நிறுவனத்தின் இந்தியாவின் Consultant – ஆக தேர்வு செய்யப்பட்டார். இதன் மூலம் பல கிராமங்களைத் தத்தெடுத்து அங்கு பால்வாடிகளை அமைத்து அவைகள் செயலாற்றுவதற்கு நிதியுதவியையும் செய்தார். காந்திகிராமம் கிராமிய கல்லூரி கல்வியினை கிராமிய முன்னேற்றம் சார்புடையதாக்கி அவற்றோடு ஆராய்ச்சியினையும் இணைத்து, காந்திகிராமம் கல்விக்கு ஓர் புதிய பரிமாணம் நமது நாட்டளவிலே கொடுத்ததென்றால் அதில் V.K. அண்ணா அவர்களுக்கு ஓர் முக்கியப் பங்குண்டு. இவையெல்லாம் காந்திகிராம கிராமிய கல்லூரிக்கு நிகர்நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்து கிடைக்க காரணமாய் அமைந்தது.

1981-ல் தேனி மாவட்டம் தி. சுப்புலாபுரத்தில் நெசவு தொழிலில் மாஸ்டர் வீவர் ஒருவர் தனது தொழிலை நிறுத்தியபோது, அங்கு வேலையிழந்த நெசவாளர்களுக்கு தொழில் கொடுக்க பாதிக்கப்பட்டவர்களால் கோரிக்கை வைக்கப்பட்டது. இதற்காக திரு V.K. அண்ணா அவர்களை உடனடியாக தொழில் தொடங்க நாடியபோது, அவர் திரு. பத்மநாபண்ணா அவர்களை சந்தித்துப் பேசுமாறு கூறினார். அவ்வாறே திரு பத்மநாபண்ணா அவர்களைச் சந்தித்து தி. சுப்புலாபுரத்தில் கதர் உற்பத்தியைத் தொடங்கி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்குமாறு கோரிக்கை வைக்கப்பட்டது. அவரும் V.K. அவர்களுடன் கலந்து முடிவெடுப்பதாகக் கூறியதுடன், உடனே கதர் உற்பத்தி மையம் ஒன்று தி. சுப்புலாபுரத்தில் துவங்க இருவரும் அனுமதி அளித்தனர். அன்று முதல் நெசவாளர்கள் ஒரு கௌரவமான கட்டமைப்பில் இயங்கி நல்ல போனஸ், நலநிதி என்று பல்வேறு சலுகைகளை இன்றளவும் பெற்று வருகின்றனர்.

அதேபோன்று இங்குள்ள ஆதிதிராவிட மக்களுக்கும் நெசவில் பயிற்சி அளித்து வேலை வாய்ப்பளிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு 1983-ல் நெய்வோர் புனர்வாழ்வு திட்டத்தின் மூலம் 15 வீடுகளுக்கான திட்டம் 30 வீடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்த வீடுகளை பயனாளிகள் கட்டிக்கொள்ளும் காலங்களில் சாப்பாடுக்காக V.K. அண்ணா அவர்கள் ஆலோசகராக இருந்த ASW ஜெர்மனி நிறுவனம் மூலம் குடும்பத்திற்கு 50 கிலோ சோளம் வாங்கிக் கொடுத்து உதவியதை இங்குள்ள மக்கள் இன்றளவும் நன்றியுடன் நினைவு கூறுகின்றனர்.

ஆண்டிபட்டியில் சேவாநிலையம் மிகப்பிரபலமான ஒரு தொண்டு நிறுவனம் ஆகும். 1988-ல் நிர்வாக ரீதியான ஆலோசனைகள் வழங்குமாறு சேவா நிலையத்தின் உறுப்பினராக **இருந்த திரு**. P.K.K. **சம்பத் மூலம்** திரு V.K. அண்ணா அவர்களை கேட்டுக்**கொள்ளப்பட்டது**. சேவா நிலையம் நிறுவனர் டோரா அம்மையாரை திரு V.K. அண்ணா அவர்கள் நன்கறிவார். சேவா நிலையம் வந்து பொதுக்குழு உறுப்பினர்களை ஒன்று திரட்டி சேவா நிலையத்தின் வளர்ச்சிக்கு தகுந்த ஆலோசனைகள் தந்ததுடன், அனைவரது ஒத்துழைப்புடன் சேவா நிலையத்தின் 25-வது வெள்ளிவிழாவையும் கொண்டாட வைத்து, வெள்ளி விழா நினைவுக் கட்டிடத்திற்கும் அடிக்கல் நாட்டி அனைவரது அன்பையும் பெற்றார்.

காந்திகிராமத்தின் கட்டிடங்களை மிக எளியமுறையில் சுற்றுவட்டாரங்களில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டே கட்டி, கட்டிடக்கலை நிபுணர் Laurie Baker-க்கு இணையாக அமைத்துக்கொடுத்தார். இக்கட்டிடங்களின் செங்கல் அனைத்தும் V.K. அண்ணாவின் கதை சொல்லி கவிதை பாடும்.

இன்று தமிழ்நாட்டில் உள்ள அதிகபட்ச தொண்டு நிறுவனங்கள் திரு V.K. அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டதுதான். தன்னிடத்தில் பயின்ற மாணவர்களை கொண்டு தொண்டு நிறுவனங்களை துவங்குவதற்கு வழிகாட்டியாக இருந்ததுடன் அதற்கான திட்டங்களையும் பண உதவிகளையும் ASW நிறுவனம் மூலமாக தந்துதவி இருக்கிறார். தனது நீண்ட நெடிய மக்கள் பணியில் ஈடுபட்ட இந்த மாமனிதர் 1992 ஜனவரி 13-ந் தேதியில் அமரரானார்.

V.K. அவர்களின் துணைவியார் திருமதி விஜயலெட்சுமி அவர்கள் அனைவரிடத்திலும் அன்புள்ளம் கொண்டவர். அமைதியாகவும் அடக்கமாகவும் அண்ணாவின் அனைத்து அரும்பணிகளுக்கும் உடனிருந்து, உதவி திரு சிவகுமார் மற்றும் திருமதி ராஜலெட்சுமி ஆகியோரை ஈண்டெடுத்த தேவதை.

திரு சிவகுமார் ஒரு சிறந்த ஆடிட்டர். தனது தந்தையின் விருப்பத்திற்கிணங்க காந்திகிராமத்திற்கே தொண்டாற்ற எண்ணி தற்போது காந்திகிராமம் அறக்கட்டளை செயலாளர் பொறுப்பில் இருந்து தந்தையின் வழியில் காந்திகிராமத்திற்கு சிறப்பாக தொண்டாற்றி வருகிறார்.

V.K. அண்ணா ஓர் விஞ்ஞானி, சிறந்த ஆசிரியர், **தலைசிறந்த** தலைவர், நல்ல ஒருங்கிணைப்பாளர் - இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் அவரிடத்தில் **அனைவரையும்** கவர்ந்தது அவருடைய மனிதநேயம், பணிவு மற்றும் சமுதாயத்தில் பின்தங்கியோர் மீது அவருக்கிருந்த அன்பு" என்ற திரு இன்கே காப்லர் என்ற ஜெர்மானிய ASW அதிகாரியின் கூற்று முற்றிலும் உண்மைதான்.

வாழ்க V.K. அண்ணா! அவர்கள் புகழ்!!